DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.115/2022

Prosecution witness – PW 4

| | | |
|---|---|---|
| Name | : திரு.குமரேசன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.)
25.09.2025 at 12.40 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சிக்கல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா என்பவர் கடந்த 2022 ம் ஆண்டு சிக்கல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார் என்பதை ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். அவர் தற்போது பணியிடமாறுதலாகி சென்று விட்டார். இன்று அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. அவர் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா என்பவர் கடந்த 07.05.2022 ம் தேதி 21.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்த போது சூரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையக் குற்ற எண்.59/2022 இ.த.ச. பிரிவுகள் 294(b), 324–ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

4. பின்னர் 08.05.2022 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருள் மற்றும் ஆறுமுகன் ஆகியோர் முன்னிலையில்

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. சம்பவ சாட்சிகளான சூரன், கலைச்செல்வி, ராமையா, பூமயில் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்னர் எதிரிகளை 14.05.2022 ந் தேதி 08.30 மணிக்கு சிக்கல் பஸ் ஸ்டாப்பில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

7. பின்னர் 03.06.2022 ந் தேதி வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.ராஜசேகர் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். மருத்துவர்கள் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கியுள்ளார்கள். அ.சா.1 க்கு இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும்.

8. 03.06.2022 ம் தேதி வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 –ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் புலன் விசாரணை அதிகாரி புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

2. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது

செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி